

நேற்று (31.12.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இராயபுரம் மண்டலம், வார்டு–57, வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில், மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கட்டடத்தினை திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமர குருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், ல.நவீன், வெ. பரிமளம், மண்டல அலுவலர் விஜய் பாபு, செயற்பொறியாளர் சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 315 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை,ஜன.1-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 315 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (31.12.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 98 அ, லாக்மா நகர், காளியம்மன் கோயில் அருகில், 2) வட்டம் 98, அம்பேத்கர் நகர் 2வது தெரு (அருகில் பால்வாடி பள்ளி), சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*



*இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதாவாசு எம்.சி, டி.வி. செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ. வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜய குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, 151வது வட்டத்தில், விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் சரிபார்ப்பு சிறப்பு முகாமில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ச. சங்கர் கணேஸ் எம்.சி.அனைத்து வாக்கு சாவடிகளிலும் ஆய்வு மேற்கொண்டார்.உடன் சின்ன போரூர் வ.விஜயன், ஆர்.சேகர், செ.ராமையா, ம.சிவா,கி.முரளி,கு. விமலா சேகர், வி. பன்னீர் செல்வம், கோ.கண்ணதாசன், கராத்தே கி.குமார், ஆர். முரளிகிருஷ்ணன், மோ.சுந்தர்,ப. சரவணன், பூத்தப்பேடு ப. ரகு, எம்.லோகேந்திரபாபு, நேதாஜி நகர் ஏ.பிரசாந்த், ஏ.செந்தில்குமார், உதயம் இரா. ராஜேஷ், வி.பாலு, எம். தங்கராஜ்,ஆட்டோ கிருஷ்ணன்,ப. மணிகண்டன்,உமா மகேஸ்வரி, ஆர். கோவிந்தராஜ், லட்சுமி நகர் விஸ்வநாதன்,சத்யா நகர் வினோத்,மு. ஐய்யப்பன்,சின்ன போரூர் கபடி அ.ஜான் வ.மணிகண்டன், ராஜலட்சுமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இளமதி
**சனவரி 1 (1975)**



**இளமைப் பருவத்திலேயே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1963ஆம் ஆண்டு சென்னை கடற்கரை சாலையில், கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, கைது செய்யப்பட்டு ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 88வது வட்டச் செயலாளராக 1964ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பத்தாண்டுகள் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இராயபுரம் தொகுதியில்

# வாக்காளர் பட்டியல் ஆய்வு!


*சென்னை, ஜன. 1-*

*இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குயின் மேற்கு பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும், வாக்காளர் பட்டியலை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மேற்கு பகுதி செயலாளர் வா. பெ. சுரேஷ், மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் புகழேந்தி, பாலலட்சுமணன், இரா.பாலன் எம்.எல்.ரவி, கௌரீஸ்வரன், கொரியர் முருகன், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு பங்கேற்றனர்.*

## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”

# சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் பகுதிவாரியாக பாகப் பொறுப்பாளர்கள் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் பாக பொறுப்பாளர்கள் கூட்டங்கள் வருகின்ற 02.01.2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை பகுதிச் செயலாளர்கள் தலைமையில் நான் ஆலோசனைகளை வழங்க இருப்பதால் பின்வரும் பட்டியலின்படி கூட்டங்கள் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 02.01.2026 மாலை 5 மணி | தியாகராய நகர் கிழக்கு/மேற்கு பகுதி | எல்லையம்மன் கோவில்தெரு மேற்கு மாம்பலம், சந்திரசேகர் திருமண மண்டபம் |
| 02.01.2026 மாலை 6 மணி | மயிலை மேற்கு பகுதி | கே.பி.தாசன் சாலை சமூக நலக்கூடம் |
| 02.01.2026 மாலை 7 மணி | மயிலை கிழக்கு பகுதி | சிறுங்கேரி மடம் சாலை, மகிழ் மகிழ்மன்றம் |

மேற்கண்ட பாகங்கள் நடைபெறும் கூட்டங்களில் தொகுதி பார்வையாளர்கள், வட்டச்செயலாளர்கள், பாகப்பொறுப்பாளர்கள்(BLA-2), ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பாகபொறுப்பாளர்கள் பணி குறித்து. “திராவிட பொங்கல் விழா” மற்றும் கழக ஆக்க பணிகள்

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

## பெண்களுக்கான திட்டங்களை நிறைவேற்றியதால்

# முதல்வர் செல்லுமிடமெல்லாம் பெண் சக்திகள் திரண்டு வரவேற்கிறார்கள்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!



தினகரன்

டிசம்பர் 31, 2025 புதன்கிழமை

திராவிட மாடல்

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது தான் திராவிட மாடல். பெண் சக்தியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதும், அவர்கள் உழைப்புக்கு அங்கீகாரம் அளிப்பதும், அவர்களின் உயர்கல்வியையும், வேலை வாய்ப்பையும் முதன்மையாக கொண்டு செயல்படுவதும்தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் சிறப்பு அம்சம். அதை நோக்கியே அவர் நடைபோடுகிறார். அந்த இலக்கை நோக்கித்தான் இந்த நான்கரை ஆண்டுகள் ஆட்சி நடந்துள்ளது. அதனால் தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் போகும் இடம் எல்லாம் பெண் சக்தி அவரை திரண்டு வரவேற்கிறது. கொண்டாடுகிறது.

சென்னை, ஜன.1–

‘தினகரன்’ நாளேட்டின் நேற்று திராவிட மாடல் என்ற தலைப்பிட்டு தலையங்கம் எழுதியுள்ளது.

அத்தலையங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெண்களுக்கான திட்டங்களை நிறைவேற்றியதால் அவர் செல்லுமிடமெல்லாம் பெண் சக்திகள் திரண்டு வரவேற்கிறார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளது.

‘தினகரன்’ நாளேட்டின் நேற்றைய தலையங்கம் வருமாறு:–

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது தான் திராவிட மாடல். பெண் சக்தியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதும், அவர்கள் உழைப்புக்கு அங்கீகாரம் அளிப்பதும், அவர்களின் உயர்கல்வியையும், வேலை வாய்ப்பையும் முதன்மையாக கொண்டு செயல்படுவதும்தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் சிறப்பு அம்சம். அதை நோக்கியே அவர் நடைபோடுகிறார். அந்த இலக்கை நோக்கித்தான் இந்த நான்கரை ஆண்டுகள் ஆட்சி நடந்துள்ளது. அதனால் தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் போகும் இடம் எல்லாம் பெண் சக்தி அவரை திரண்டு வரவேற்கிறது, கொண்டாடுகிறது.

பெண்கள் படிக்கக் கூடாது, அடுப்படியை தாண்டி செல்லக்கூடாது, ஆண்களை சார்ந்து மட்டுமே இருக்க வேண்டும் என்று இருந்த சமூகத்தின் தடைகளை எல்லாம் உடைத்தது திராவிட மாடல் தான். தேவதாசி முறை ஒழிப்பு, பெண்களுக்கு சொத்துரிமை, பெண்களின் கல்வி உரிமை என அதிக அளவு உரிமை இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் வழங்கி இருப்பதால் தான் பெண்களின் முன்னேற்றம் பலமடங்கு உயர்ந்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு, தமிழ்நாட்டில் அதிக பெண் மேயர்கள் என சமூகத்தை மாற்றி இருக்கிறது மு.க.ஸ்டாலினின் தலைமையிலான அரசு. சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம அதிகாரம் வழங்கும் சட்டத்தையும் அமல்படுத்த போராடி வருகிறது தி.மு.க.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம் என முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் நலனுக்காக கொண்டு வரப்பட்ட திட்டங்கள் ஏராளம். 1989ல் மகளிர் சுயஉதவி குழு துவங்கி, இப்போது 1 லட்சத்து 39 ஆயிரத்து 560 கோடி ரூபாய் கடன் வழங்கி சாதித்ததும் திராவிட மாடல் அரசுதான். பணிபுரியும் பெண்கள் தங்குவதற்காக இதுவரை 19 தோழி விடுதிகள் உருவாக்கப்பட்டு, பணியிடங்கள் மட்டுமல்லாமல் தங்கும் இடமும் பாதுகாப்பானதாக மாற்றி சாதித்து இருக்கிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு.

பெண்களுக்கான திட்டங்களை, திராவிட மாடல் அரசு போன்று, வேறு எந்த அரசும் செய்திருக்க முடியாது. பெண்களின் வாக்கு வங்கியை நோக்கி அல்ல, அவர்களது வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றாலும் பெண்களுக்கான ஆட்சியாகத்தான் திராவிட மாடல் ஆட்சி இருக்கும் என்று உறுதி அளித்திருக்கிறார் முதல்வர். ஆனால் நாட்டின் பெண்கள் அதிகம் பயன்பெற்ற 100 நாள் திட்டத்தை குழிதோண்டி புதைத்து இருக்கிறது ஒன்றிய பா.ஜ அரசு. 125 நாள் வேலை என்று ஆசை காட்டி நிதிச்சுமையை மாநில அரசுகள் மீது சுமத்தி, திட்டங்கள் ஒதுக்கும் அதிகாரத்தை டெல்லியில் வைத்துக் கொண்டு 100 நாள் வேலைத் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தியிருக்கிறது மோடி அரசு.

இன்னும் சொல்லப்போனால் மும்மொழி கொள்கையை ஏற்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை மறுத்து இருக்கிறது ஒன்றிய அரசு. அவர்கள் தான் காசி தமிழ் சங்கம் நடத்தி ராமேஸ்வரத்தில் நிறைவு விழா நடத்தி இருக்கிறார்கள். அந்த விழாவுக்கு வந்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரபிரதான், ஒன்றிய அரசின் மும்மொழிக்கொள்கையை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று கதை விட்டுக் கொண்டு இருக்கிறார். தமிழ்நாடு அவர்களை இன்னும் உள்ளே விடாமல் இருப்பதற்கும் காரணம் புரிகிறது, திராவிட மாடல் ஆட்சியின் வெற்றியின் மகத்துவமும் இதன் மூலம் தெரிகிறது.


இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவரணி சார்பில் 21 ஆம் ஆண்டு சுனாமி நினைவு நாளையொட்டா அமைதி ஊர்வலம்,நினைவேந்தல் நிகழ்ச்சி ,பொதுமக்களுக்கு உணவு மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் வீ.வீ.ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நல உதவிகளை வழகினார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ.முன்னிலை வகித்தார். இதில் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செலாளர்கள் இரா.லட்சுமணன், இரா.செந்தில்குமார், வ.பே.சுரேஷ், மாநில மீனவரணி நிர்வாகி வீ.பி.பொன்னரசு, மாநில வழக்கறிஞர் அணி நிர்வாகி என்.மருதுகணேஷ், பொதுக்குழு உறுப்பினர் சு.சேகர், கு. நற்குணம்,எஸ்.கே.இளங்கோஉள்ப மாவட்ட பகுதிக் கழகநிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் மாவட்ட மீனவரணிநிர்வாகிகள் அனைத்து வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள்,43, 43(அ) வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜெயமங்கலம் பி. அய்யாவு
**சனவரி 1 (1999)**



**தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றியவர்.**

**ஜெயமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – தேனி கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் – பெரியகுளம் கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**